# கண்டி இலக்கியச்செய்தி மடல் 8

ஆசிரியர்:- இரா. அ. இராமன் - துணை ஆசிரியர் இக்பால் அலி

மாத இதழ் | செப்டெம்பர் - ஒக்டோபர் 1997 | அன்பளிப்பு ரூபா 10.00


அமரராகிவிட்ட இலக்கிய நண்பர்

## யோ. பெனடிக்ற் பாலன்


- தெளிவத்தை ஜோசப் -




> தோழர் பெனடிக்ற் பாலன் கண்டியிலிருந்துதான் மலையகத்திற்கான தனது இலக்கியப்பணியை மேற்கொண்டார். கண்டியில் ஆசிரியராக கடமைக்கு வந்த அவர் பல இளைஞர்களை இலக்கிய உணர்விற்கு உட்படுத்தியது அல்லாமல், முற்போக்கு சிந்தனைகளையும் போதித்தார். அவரிடத்தில் முற்போக்கு இலக்கியம் கற்றவர்களில் நானும் ஒருவன் என்பதில் பெரும் மகிழ்ச்சி கொள்வதோடு அன்னாரது மரணம் எனக்கு பெரும் வேதனை அளிக்கின்றது. தெளிவத்தை ஜோசப் அவர்களின் இக்கட்டுரையை பிரசுரித்து மக்கள் கலை இலக்கிய ஒன்றியமும், கண்டி இலக்கியச் செய்தி மடலும் தலைசாய்த்து அன்னாருக்கு அஞ்சலி செலுத்துகின்றது.
>
> -ஆசிரியர்-

சிந்தனைத் தெளிவும் சிருஷ்டித் திறனும் கொண்ட திரு. பெனடிக்ற் பாலன் சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், குட்டிக்கதைகள் போன்ற தனது படைப்புக்கள் மூலம் ஈழத்து இலக்கியத்துக்கு வளமான பங்களிப்புச் செய்து வந்த ஒரு மூத்த எழுத்தாளர்.

இலங்கை இலக்கியத்துறையில் அறுபதுகளுக்குச் சற்று முன்னதாக அடி எடுத்து வைத்த இவர் முற்போக்கு இலக்கிய பேரியக்கத்தால் ஆகர்ஷிக்கப்பட்டு உழைக்கும் மக்களின் எழுச்சிக்கும், ஐக்கியத்துக்கும் உறுதுணையாய் நிற்கும் தனது படைப்புகள் மூலம் இலக்கியத்துறையில் நல்ல பல விளைச்சல்களைத் தந்தவர்.

அறுபதுகளில் எழுத ஆரம்பித்தாலும் 1965க்குள் மூன்று சிறுகதைப் போட்டிகளில் தங்கப்பதக்கம் பெற்று தனது எழுத்தாற்றலை நிரூபித்துக் கொண்டவர்.

யாழ் இளம் எழுத்தாளர் சங்கத்தை ஆரம்பித்து, எழுத்தாளர் சங்கத்தின் ஏடான 'மலர்' என்னும் சஞ்சிகையின் ஆசிரியராகப் பணியாற்றி இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ் கிளைகளின் தீவிர ஊழியராகச் சேவையாற்றியவர் திரு. பெனடிக்ற் பாலன்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பி. ஏ. பட்டமும், அரச அறிவியலில் பி. ஏ. ஆனர்ஸ் பட்டமும் பெற்று கல்வி வெயியீட்டுத் திணைக்களத்தில் பத்திராதிபராகவும் பணியாற்றிய இவர் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியருமாவார். எம். ஏ. பட்டதாரியுமாவார். பதுளையிலிருந்து கிழக்கே பத்து மைல் தொலைவில் உள்ள கந்தேகெதரைத் தமிழ் மகா வித்தியாலயத்தில் 1964லிருந்து ஐந்தாண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவருடைய மனித நேயமிக்க மனம், அடிப்படை உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்ட மலையக உழைக்கும் மக்கள்பால் ஈர்க்கப்பட்டு அவர்களின் எழுச்சிக்காகவும் தனது எழுத்தைப் பயன்படுத்தினார். தமிழக - ஈழத்துச் சஞ்சிகைகளில் முப்பதுக்கும் குறையாத மலையகச் சிறுகதைகளைப் படைத்துள்ளார்.

வசந்தத்தில் தொடர்கதையாக வந்து, பின்னர் நூலுருப் பெற்ற 'சொந்தக்காரன்' நாவல் மலையக மக்களின் வீடில்லாப் பிரச்சனையை மையமாகக் கொண்டது. இலக்கிய உலகில் இவருக்கு ஒரு தரமான இடத்தையும், கவனிப்பையும் பெற்றுக்கொடுத்த நூல் இது.

1963ல் எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம் இவருடைய 'குட்டி' என்னும் நாவலை நூலுருவில் வெளியிட்டது. கண்டி கலாச்சாரக்குழு இவருடைய குட்டிக் கதைகளை தொகுத்து 'தனிச்சொத்து' என்னும் பெயரில் வெளியிட்டது. பூபாலசிங்கம் புத்தகசாலை இவரது 'கல்வி உளவியல் அடிப்படைகள்' என்ற நூலை வெளியிட்டுள்ளது.

ஈழத்து சிறுகதை உலகில் நல்ல சில சுவடுகளைப் பதித்துள்ள திரு. பெனடிக்ற் பாலனின் இரண்டு சிறுகதைத் தொகுதிகள் அண்மையில் வெளிவந்தன. 1995ல் வெளிவந்திருக்க வேண்டிய தொகுதி தலைவிதியைப் பறிகொடுத்தோர். திரு. மாத்தளை கார்த்திகேசு தன்னுடைய குறிஞ்சி வெளியீட்டின் மூலம் வெளியிட முயற்சித்த இத்தொகுதி தமிழ்நாட்டில் அச்சிடப்பட்டதால் தாமதமாகி 1996ல் வெளிவந்தது. யுனைட்டட் மெர்ச்சன்ஸ் அதிபர் திரு. எஸ். பி. சாமி அவர்கள் 'விபச்சாரம் செய்யாது இருப்பாயாக' என்னும் தொகுதியினை 1995ல் வெளியிட்டார். இந்தத் தொகுதிக்கு இலங்கை சாகித்திய விருதும் கிடைத்தது. 90களின் ஆரம்பத்தில் மிகவும் நோயுற்றிருந்தார். பிழைப்பார் என்னும் நம்பிக்கை இருக்கவில்லை. ஆனால் இரண்டு சிறுகதைத் தொகுதிகள் அடுத்தடுத்து வந்துவிட்ட மகிழ்வில் தனது முந்தைய வியாதிகள் அற்று குணமடைந்து புதுமனிதனாக, உற்சாகத்துடன் எழுதிக்கொண்டிருந்தவரை திடீரென இறைவன் அழைத்துக்கொண்டான். 30. 07. 97 அன்று இச்சோகம் நிகழ்ந்தது.

இறப்பதற்கு இரண்டு வாரத்துக்கு முன்பதாக, தொலைபேசியில் அழைத்தார். 'தெளிவத்தை ஒரு நாவல் எழுதிக் கொண்டிருக்கின்றேன். வாருங்கள் அதுபற்றிக் கொஞ்சம் பேசுவோம் என்றார். ஆறேழு அத்தியாயங்களுடன் அரைவாசியில் வைத்துவிட்டு அவசரமாய்ப் போய்விட்டார். ஆறமாட்டேன் என்கிறது மனது.

### பெனடிக்ற் பாலனின் நூல்கள்.

1. குட்டி (நாவல்)
2. தனிச்சொத்து (குட்டிக்கதைகள்)
3. சொந்தக்காரன் (நாவல்)
4. பாலஸ்தீனம் என்னை அழைக்கிறது (குறுநாவல்)
5. விபச்சாரம் செய்யாதிருப்பாயாக (சிறுகதைகள்)
6. தலைவிதியைப் பறிகொடுத்தோர் (சிறுகதைகள்)
7. கல்வி உளவியல் அடிப்படைகள் (பாடநூல்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி இலக்கியச்செய்தி மடல்

**நூறு மலர்கள் மலரட்டும்**
**நாறும் கீழ்மைகள் தகரட்டும்**

தொடர்புகளுக்கு
ஆசிரியர்
18/13, பூரணவத்தை
கண்டி

செப்டெம்பர்-ஒக்டோபர் 1997


### ஆசிரியர் கருத்து

**8வது இதழ் உங்கள் கரங்களில்**

*கண்டி இலக்கியச் செய்தி மடல்*
பல்கலைக்கழகங்கள்,
அறிஞர்கள்,
எழுத்தாளர்கள்,
வாசகர்கள்
மத்தியிலே ஓர் இடத்தைப்
பெற்றுக்கொண்டது.
ஒரு தனிமனிதனாக நின்று
ஒரு சிறு பத்திரிகை அதுவும் எட்டு
இதழ்களை
வெளிக்கொணர்வது பெரும் சாதனைதான்.
இந்த எட்டு இதழ்களை மலரச் செய்ததில்
எவ்வளவு சிரமப்பட்டிருப்பேன்.
அதை நினைத்துப் பார்ப்பது பெரும்
மலைப்பாக உள்ளது.
நாட்டிலுள்ள தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்கள்,
பல்கலைக்கழக அறிஞர்கள்,
தொலைக்காட்சி,
வானொலி அன்பர்கள்
வாசகர்கள் ஆகியோர்களுக்கு
அஞ்சலிலே போய் சேர்கின்றது.
இதில் மகிழ்ச்சி என்னவென்றால்
மலையக இலக்கியத்தை நேசிக்கின்ற
அனைவரினதும் கரங்களில் தவழ்கின்றதே
அதுவே
பெரும் மகிழ்ச்சியாகும்.
அந்த மகிழ்ச்சி மட்டும் போதுமா?
இதழ் தொடர்ந்து உங்கள் கரங்களில்
தவழ வேண்டாமா?
இந்த இதழ் உங்கள் கரங்களில்
தவழ்கின்றது
இதன் வளர்ச்சியை, வருகையை
கொஞ்சம் சிந்திப்பீர்களா?
மலையகத்தில் எத்தனையோ
தரமிக்க சிறு சஞ்சிகைகள்
மடிந்து விட்டன
காரணம் நாம் தானே?
இச்செய்தி மடலும்
மடிய வேண்டுமா?
மடியாது - விடமாட்டேன்(டோம்)
*என்றென்றும்*
*அன்புடன்*
*உங்கள்*
*இரா. அ. இராமன்*

## கண்டி இலக்கியக் களம்

### முற்றத்திற்கு வாருங்கள் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா

மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கவிஞர் இக்பால் அலியின் முற்றத்திற்கு வாருங்கள் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா 03. 08. 1997 அன்று கண்டி சிட்டிமிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

கலாநிதி துரை. மனோகரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மட்டுநகர் மாநகரசபை முதல்வர் செழியன் பேரின்பநாயகம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

முதல் பிரதியை பொபி இண்டஸ்ரீஸ் உரிமையாளர் ஏ. றசாக் அவர்களின் புதல்வன் செல்வன் றிஸாம் பெற்றுக் கொண்டார். இரண்டாவது பிரதியைப் பெற்றுக் கொண்டார் சிறிலங்கா சிகாமணி நாகலிங்கம் இரத்தினசபாபதி அவர்கள்.

கவிவாழ்த்தை மு. கு. ஈழக்குமாரும், வாழ்த்துரையை எஸ். எம். ஏ. கபூர் அவர்களும் நிகழ்த்தினார்கள். நூல் அறிமுகத்தை இலங்கை வானொலி முஸ்லீம் சேவை கட்டுப்பாட்டாளர் நூராணியா ஹசன் ஆற்றினார்.

நூல் விமர்சனத்தை பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா, விரிவுரையாளர், இரா. நித்தியானந்தன், ஆசிரியர் இரா. சிவலிங்கம், செல்வி. கமலினி நமச்சிவாயம், எஸ். எஸ். இராஜேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

பிரதம விருந்தினரின் சிறப்பு உரையை அடுத்து நூலாசிரியர் இக்பால் அலி பதில் உரை நிகழ்த்தினார். நன்றி உரையை திருமதி சுலோசனா பரமசிவம் நல்கினார்.

### மலையகச் சிறுகதைப் போட்டி பரிசளிப்பு விழா

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ப்பிரிவும் லக்கிலேண்ட் பிஸ்கட் நிறுவனமும் இணைந்து நடாத்திய மலையகச் சிறுகதைப் போட்டி பரிசளிப்பு விழா 02. 08. 1997 அன்று கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை வானொலி பணிப்பாளர் ஜனதாசபீரிஸ் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

தமிழ்ப்பிரிவு பணிப்பாளர்கள், தயாரிப்பாளர்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து கொண்டது சிறப்பான ஒரு அம்சமாகும்.

விழா ஏற்பாடு பாராட்டத்தக்க அளவில் அமைந்திருந்தது. நிகழ்ச்சிகளை அறிவிப்பாளர் இளையத்தம்பி தயானந்தா அழகுற தொகுத்தளித்தார்.

மலையக மூத்த எழுத்தாளர்களான திரு. மு. சிவலிங்கம், திரு மல்லிகை சி. குமார், திரு. கே. இராமச்சந்திரன், திருமதி இஸ்மாலிக்கா ஆகியோர்களுடன் இளம் எழுத்தாளர்களும் பரிசு பெற்றமை மனதுக்கு பெரு மகிழ்ச்சியாக இருந்தது.

இவ்விழாவின் நாயகனாக மேடையில் அமர்ந்திருந்த லக்கிலேண்ட் எஸ். முத்தையா அவர்களுக்கு இச்சிறுகதைப் போட்டியை நடாத்திய வி. என். மதியழகன் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

மலையகச் சிறுகதைப் போட்டிக்கான பணப் பரிசுகளையும், விழாவிற்கான அனைத்து செலவுகளையும் ஏற்று, மலையக இலக்கிய செழுமைக்கும் அதன் வளர்ச்சிக்கும், மலையக விழிப்புணர்வுகளுக்கும் வித்திட்டுள்ளார் முத்தையா அவர்கள்.

இலக்கியவாதிகளை ஊக்கப்படுத்தியமைக்காக இந்த நல்ல உள்ளத்தின் பெயர், மலையக எழுத்தாளர்களின் உள்ளத்தில் என்றும் நீங்கா நினைவாக நிலைத்திருக்கும். மலையக இலக்கியம் எழுதும் போது கட்டாயம் இவரின் பெயர் முதன்மை பெறும், இப்பெரும் பணியினை செய்த எங்கள் 'இலக்கியக் காவலர்' முத்தையா அவர்களை கண்டி இலக்கியச் செய்தி மடல் வாழ்த்துகின்றது. போற்றுகின்றது. இச்சிறுகதைப் போட்டியினை நடாத்திய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சி கட்டுப்பாட்டாளர் வி. என். மதியழகன் அவர்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

### 33 மலையகச் சிறுகதை எழுத்தாளர்களின் சிறுகதைகளைத்தொகுத்து தந்து சரித்திரம் படைத்த கொழும்பு "துரைவி" வெளியீட்டகம்

56 மலையகச் சிறுகதை எழுத்தாளர்களின் சிறுகதைகளை சி. வி யின் சிறுகதை தலைப்பான உழைக்கப் பிறந்தவர்கள் என்றத் தலைப்பைத் தாங்கி வெளி வந்துள்ளது. இந்நூலின் அமைப்பு முறை, அட்டைப்படம், பக்கங்கள் ஒரு பெறுமதியான ஆங்கில நூலை தரிசிப்பதைப் போல ஒரு உணர்வை எமக்குத் தருகின்றது. 'துரைவி' வெளியீட்டகத்தின் நிர்வாகி திரு. துரை. விஸ்வநாதன் இரண்டாவது மலையகச் சிறுகதைகளை தந்து மலையக எழுத்தாளர்களிடையே ஒரு உயர்ந்த மனிதராக மதிக்கப்படுகின்றார். அவர் இன்னும் பல நூல்களை பதிப்பித்து எமக்குத் தர வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

| | |
|---|---|
| நூலின் பெயர் | : *உழைக்கப் பிறந்தவர்கள்* |
| வெளியீட்டாளர் | : திரு. துரை. விஸ்வநாதன் |
| வெயீடு | : 'துரைவி' வெளியீட்டகம் |
| முகவரி | : 85. இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை - கொழும்பு 13 |
| தொகுப்பாசிரியர் | : திரு. தெளிவத்தை ஜோசப் |
| பக்கங்கள் | : 495 |
| விலை | : ரூபா 225/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மலையகப் பாரதி குறிஞ்சி தென்னவன்

குறிஞ்சி தென்னவன் கடும் சுகயீனம் காரணமாக கொழும்பு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று நல்ல சுகத்தோடு இல்லம் திரும்பினார் என்ற நல்ல செய்தி கிடைத்தது. அனைத்து இலக்கியவாதிகளின், நண்பர்களின் பிரார்த்தனைதான் அவரின் அந்த நோயை அகற்றி சுகத்தை தந்துள்ளது. அன்னார் தொடர்ந்து சுகத்தோடு வாழ்ந்து மலையக செழுமைக்கு மீண்டும் தனது சேவையை ஆற்ற கண்டி இலக்கியச் செய்தி மடல் வாழ்த்துகின்றது.

*இவரது முகவரி*
*லபுக்கலை மேற்பிரிவு*
*லபுக்கலை*

### மலையக கவிஞர் க. ப. லிங்கதாசன்

கவிஞர் க. ப. லிங்கதாசன் அவர்கள் கடும் சுகவீனம் காரணமாக தமிழ்நாட்டு மருத்துவமனையில் கிட்டத்தட்ட 8 மாதங்கள் சிகிச்சைப்பெற்று அண்மையில் நாடு திரும்பி உள்ளார் என்பதை அறிந்து கவலைப்பட்டோம். செய்தி மடலுக்கு வருட சந்தாவும், கடிதமும் அனுப்பியிருந்தார். அந்த கடிதம் மூலம் தான் அவரைப் பற்றிய செய்தி கிடைத்தது. மீண்டும் அவரது கவிதைகள் பத்திரிகைகளில் வெளிவருகின்றது. அன்னார் தொடர்ந்து சுகத்தோடு வாழ்ந்து இலக்கியப் பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

*இவரது முகவரி,*
*க. ப. லிங்கதாசன்*
*167/25, டிம்புல வீதி, அட்டன்.*

### வீரகேசரி வார இதழின் பிரதம ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார் திரு. வி. தேவராஜ்

வீரகேசரி துணை ஆசிரியர் திரு. வி. தேவராஜ் ஞாயிறு இதழின் பிரமத ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். மலையகப்பகுதி செய்தி ஆசிரியராகவும், 'குறிஞ்சிப்பரல்கள்' பகுதியை தயாரித்து வழங்குபவராகவும் கடமைபுரியும் திரு. வி. தேவராஜ் தமது முழுத் திறமைகளையும் செலுத்தி ஞாயிறு இதழை மேலும் சிறப்புற வெளிக்கொணர வேண்டுமென வாழ்த்துகின்றோம். தொடர்புகளுக்கு,

*வீ. தேவராஜ்*
*பிரதம ஆசிரியர்*
*வீரகேசரி ஞாயிறு இதழ்*
*த. பெ. இல. 160, கொழும்பு – 14*





**சீறிவரும் சூறாவளி – 78**
**கட்டுரைத் தொகுதி படங்களுடன்**

மட்டுநகர் மேயர் செழியன் பேரின்பநாயகம் அவர்கள் 1978-ம் ஆண்டு கிழக்கிலங்கையை தாக்கி அழித்த சூறாவளியின் தாக்கத்தை அதே ஆண்டு தினகரன் பத்திரிகையில் தொடராக எழுதிய கட்டுரைகள் படங்களுடன் விரைவில் வெளிவரவுள்ளது. இந்நூல் கண்டியில் அச்சாகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. தொடர்புகளுக்கு,

*நகரபிதா செழியன் பேரின்பநாயகம்*
*மட்டுநகர் மாநகரசபை*


### "தினக்குரல்" – இலக்கியக் குரல் பகுதி
### இலக்கியவாதிகளுக்கு கட்டாயம் தேவையான களம்

இலங்கையின் பிரபல எழுத்தாளரும், அண்மையில் வெளியான 'விடியட்டும் பார்ப்போம்.........!' சிறுகதைத் தொகுதியின் ஆசிரியருமான புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் அவர்களின் பார்வையில் மிளிரும் தினக்குரல் – இலக்கியக்குரல் பகுதி பிரதி சனி தோறும் வெளிவருகின்றது. பக்கச் சார்பின்றி அனைத்து எழுத்தாளர்களையும் நூல்களையும், சஞ்சிகைகளையும் அறிமுகப்படுத்தி வருவது பாராட்டத்தக்கது. நண்பர் ஆ. இரத்தினவேலோன் போன்றோரின் இப்பணி எம்மைப் போன்ற எழுத்தாளர்களுக்கு கட்டாயம் தேவை. இவரின் இலக்கியப் பணி தொடர வாழ்த்துகின்றோம்.

*தொடர்புகளுக்கு,*
*புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்*
*"இலக்கியக்குரல்"*
*"தினக்குரல்"*
*68, எலிஹவுஸ் வீதி, கொழும்பு – 15*

### வீரகேசரி ஞாயிறு இதழில் "பொதிகை" இலக்கியப்பகுதி

நண்பர் கோபன் அவர்களால் தயாரித்து வழங்கப்படும் 'பொதிகை' இலக்கியப்பகுதி ஞாயிறு தோறும் வெளிவருகின்றது. இது வீரகேசரி ஞாயிறு இதழில் இலக்கியப்பகுதி இல்லையே என ஏங்கியவர்களுக்கு மகிழ்ச்சித்தரும் என்பது உண்மையே. 'நக்கீரன் பார்வையில்' பகுதி, காத்திரமான பகுதி. கோபன் அவர்களின் இப்பணித் தொடர வாழ்த்துவதோடு, மேலும் சிறப்புற வேண்டுமென விரும்புகின்றோம்.

*தொடர்புகளுக்கு,*
*"பொதிகை"*
*வீரகேசரி ஞாயிறு இதழ்*
*த. பெ. இல. 160, கொழும்பு – 14*

### வீரகேசரி "இலக்கிய உலகு" பகுதி

இலங்கையின் பிரபல பெண் எழுத்தாளர்களில் ஒருவரும் பேச்சாளருமான திருமதி அன்னலட்சுமி இராசத்துரை அவர்களால் தயாரித்து வழங்கப்படும் 'இலக்கிய உலகு' பகுதி வீரகேசரி தின இதழில் வெளிவருகின்றது. காத்திரமான இலக்கியப் படைப்புக்களை வெளிக்கொணரும் இப்பகுதி இலக்கிய நெஞ்சங்கள் விரும்பி வரவேற்கும் ஒரு பகுதியாகும். இப்பகுதி தொடர்ந்து வரவேண்டும். இலக்கியவாதிகளை கவர வேண்டுமென விரும்புகின்றோம். தொடர்புகளுக்கு,

*இலக்கிய உலகு*
*வீரகேசரி*
*த. பெ. இல. 160, கொழும்பு – 14*


நவமணி வார இதழின் பிரதம ஆசிரியர்
*எம். பி. எம். அஸ்ஹர் அவர்களின்*
உறும்பும் கடலும் – உலலும் நதியும்
கட்டுரைத் தொகுதி விரைவில் வெளிவரவுள்ளது
(பாராளுமன்ற நடைமுறைகளும் – நிகழ்வுகளும் – சட்டங்களும்)
தொடர்புகளுக்கு
எம். பீ. எம். அஸ்ஹர்
*நவமணி*
*5, பெண்ட்ரீவ் கார்ட்னஸ்*
*கொழும்பு – 03*



தரமான டயர், டியூப் மற்றும் பற்றெரிகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய இடம்
**கோல்ட்லைன் டயர் ஹவுஸ்**
294, பிரதான வீதி
அக்குறணை
ஹொட்லைன் 077-801163

For quality Tyres, Tubes and Battery
*please visit*
**Goldline Tyre House**
**294, Main Street,**
**Akurana**
**Hotline 077-801163**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்று வெளியினிலே........................

—கலாநிதி துரை. மனோகரன்—

## திரையுலகில் ஒரு சிகரம்

நீண்ட காலமாகத் திரைப்படக் கலைஞரிடையே இருந்து வந்த ஓர் ஆழ்ந்த கவலை இப்போது அற்றுப்போயுள்ளது. மூன்றாந்தர, நான்காந்தரத் திரைப்படக் கலைஞர்களுக்கெல்லாம் கொடுத்துக் களைப்படைந்த நிலையில், திரைப்படக் கலைஞர்களுக்கான இந்திய அரசின் உயர் விருதான 'தாதா காகேப் பால்கே' விருது, இவ்வாண்டு நடிகர் திலகம் சிவாஜிகணேசனுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவரது வாழ்நாளுக்குள் இந்த உயர்விருது அவருக்குக் கிடைக்குமா என்று ஏங்கியிருந்த கலை நெஞ்சங்களுக்கு இப்போது நிம்மதியும், திருப்தியும் ஏற்பட்டிருக்கிறது. இந்தியச் சுதந்திரப் பொன்விழா ஆண்டில் இவ்விருது சிவாஜிகணேசனுக்குக் கிடைத்திருப்பது ஒரு வகையில் மகிழ்ச்சியையும் தருகிறது. உலகத்தின் சிறந்த நடிகர்களில் அவரும் ஒருவர் என்பதை பிரேஞ்சு அரசு வழங்கிய 'செவாலியே' விருது ஏற்கனவே நிரூபித்துவிட்டது. தமது தொழிலை மதித்து நடப்போர் நிச்சயம் உயர்வர் என்பதற்குச் சிவாஜிகணேசன் ஒரு சிறந்த உதாரணம். அவரது நடிப்புத் திறனோடு, தொழில் மீது கொண்ட பக்தியும், நேரந்தவறாமையும், தன்னடக்கமும், சிறந்த கலைஞர்களை மதிக்கும் பண்பும் அவரை இந்த அளவுக்கு உயர்த்தியுள்ளன. எத்தனையோ சிறந்த பாத்திரங்களை ஏற்றுத் தமது திறமையை வெளிப்படுத்திய சிவாஜிகணேசன், அரசியல் துறையில் முக்கிய பாத்திரம் ஏற்க முயன்று, படுதோல்வி கண்டு விட்டார். அரசியல் பாத்திரம் தமக்கு ஒத்துவராத ஒன்று என்பதை இப்போது அவர் நன்கு உணர்ந்து திருந்திவிட்டார். இந்தியத் திரைப்பட வரலாற்றில், பிருதிவிராஜ்கபூருக்குப் பின் தமக்கெனத் தனிச் சகாப்தமொன்றை உருவாக்கிய நடிகர் சிவாஜியைத் தவிர வேறு எவருமில்லை (எதிர்காலத்தில் கமலஹாசன் அதனை உருவாக்குவார்). நடிக்கும் போது குறிப்பிட்ட அப்பாத்திரத்தின் உச்சநிலைக்கே சிவாஜிகணேசன் சென்றுவிடுவதனால், சிலவேளைகளில் மிகை நடிப்பு அவரிடம் காணப்படுவதுண்டு. அவர் எப்போதும் தமக்குச் சவாலாக அமையும் பாத்திரங்களிலேயே ஜொலிப்பதுண்டு. சாதாரண பாத்திரங்கள் அவரைச் சரியாக இனங்காட்டுவதில்லை. எத்தனையோ விருதுகளையும், கௌரவங்களையும், பாராட்டுதல்களையும் தமது வாழ்நாளிற் பெற்றுவிட்ட அவருக்கு, தமக்கு 'சிவாஜி' என்ற பட்டத்தை வழங்கி, ஆசி கூறி, ஆரம்ப காலத்தில் அரசியல் வழிகாட்டியாகவும் விளங்கிய ஈ. வே. ரா. பெரியாரின் பாத்திரத்தில் இன்னமும் நடிக்கவில்லையே என்ற மனக்குறை இருக்கிறது. அக்குறையும் விரைவில் நீங்கிவிட வேண்டும். திரையுலகில் ஒரு சிகரமாக விளங்கும் சிவாஜிகணேசனைப் பற்றி, ஓரிரு வருடங்களுக்கு முன்னர் இலங்கை வானொலியில், 'கலைப்பூங்கா' நிகழ்ச்சியில் இரு முழு நிகழ்ச்சிகள் செய்ய வாய்ப்புக் கிடைத்தமையையிட்டு, இப்போதும் நான் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

### இரு ஒலிபரப்பாளர்கள்

#### (1) பஷீர் அப்துல் கயூம்

இலங்கை வானொலியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், இடையிடையே அறிவிப்பாளராகவும் விளங்குபவர் அப்துல் கயூம். வசீகரமான குரல்வளமும், பேச்சாற்றலும், இனிய சுபாவமும் கொண்ட கயூம் தரமான ஒலிபரப்பாளரில் ஒருவராவர். அது மாத்திரமன்றி, அவர் சிறந்த பட்டிமன்ற, வழக்குரைமன்றப் பேச்சாளருமாவார். அத்தகைய விவாத நிகழ்ச்சிகளில், தமது தரப்பு வாதங்களை அவர் முன்வைக்கும் அழகு, பார்ப்போரைப் பரவசப்படுத்தும். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எனது தலைமையில் நடைபெற்ற வழக்குரை மன்றம் ஒன்றில், மிகத் திறமையாக வாதாடி, பார்வையாளரை அவர் மிகவும் கவர்ந்தார். பேராதனைப் பல்கலைக்கழகத்திற் கல்வி பயின்ற அவர், தமது வானொலி நிகழ்ச்சிகளைக் கவர்ச்சியாகச் செய்து வருகின்றார். 'முத்துவிதானம்' நிகழ்ச்சியைச் சிறப்பாகச் செய்து வந்துள்ளோரில் அவரும் ஒருவர். நன்றியுணர்வு மிகுந்த எனது நன்மாணவர்களில் அவரும் ஒருவர். 'முத்துவிதானம்' நிகழ்ச்சியில், எனது பிரதிகள் சிலவற்றை மிகச் சிறப்பாகத் தயாரித்து வழங்கினார். அதேவேளை, எமது மாணவர் என்ற தமது நன்றிப் பெருக்கை, தமது நிகழ்ச்சிகளினூடாகவே வானொலியில் அவர் வெளிப்படுத்தியபோது, நான் நெகிழ்ந்திருக்கிறேன். அத்தகைய ஒரு நன்மாணவன் ஒலிபரப்புத் துறையில் உயர்ந்து வருவது, எனது உள்ளத்தைப் பூரிக்கச் செய்கிறது.

#### (2) மதுராந்தகி சின்னத்தம்பி

சனிக்கிழமை தோறும் காலைவேளைகளில் சரியாக எட்டு முப்பது மணிக்கு இலங்கை வானொலி வர்த்தக சேவையில் 'என் விருப்பம்' என்ற நிகழ்ச்சியை கேட்பவர்கள், வளர்ந்து வரும் ஒரு திறமைமிகு அறிவிப்பாளரை இலகுவில் இனங்கண்டு கொள்வர். இனிமையான குரலில் கலாநேர்த்தியுடன், மிகச் சிறப்பாக அந்நிகழ்ச்சியை வழங்கி வருபவர், மதுராந்தகி சின்னத்தம்பி. அறிவிப்பாளர்கள் பலரும் தமக்கு விருப்பமான பாடல்களை ஏனோ தானோ என்ற போக்கில், 'என் விருப்பம்' நிகழ்ச்சியில் ஒலிபரப்பித் திருப்தியடைவதுண்டு. ஆனால், மதுராந்தகி போதிய அக்கறையெடுத்து, அர்ப்பணிப்பு உணர்வுடன், தமது முழுத்திறமையையும் பயன்படுத்தி, அந்நிகழ்ச்சியைச் செவ்வனே செய்து வருகின்றார். மிகச் சுவையான நிகழ்ச்சியாக அதை அவர் வழங்கி வருகின்றார். தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சிறப்புக் கலை பயிலும் மதுராந்தகி, பரதக்கலையும் பயின்றவர். பேச்சாற்றல் மிக்கவர். ஒலிபரப்பு, ஒளிபரப்புத் துறைகளில் இயல்பான ஈடுபாடு கொண்டவர். கல்வித்துறையிலும், கலைத்துறையிலும் ஒருங்கே ஆர்வம் காட்டிவரும் மதுராந்தகி, தமது துறைகளில் வளர்ச்சிபெற்று வருவது மகிழ்ச்சிக்குரியது.

### மலையக மண்ணில் ஒரு பெருவிழா

இலங்கை வானொலியின் தமிழ்த் தேசிய சேவை அண்மையில் கண்டியில் மலையகச் சிறுகதை எழுத்தாளர்களுக்கான பரிசளிப்பு விழாவினைச் சிறப்புற நடத்தி தன்னை பெருமைப்படுத்திக் கொண்டது. சிறுகதைப் போட்டியில் மலையக எழுத்தாளர் பெறுமதி மிக்க பரிசுகளைப் பெறுவதற்குக் காரணமாக விளங்கிய லக்கிலேண்ட் பிஸ்கட் கம்பனி உரிமையாளர் எஸ். முத்தையா அவர்களை (கிரிக்கட் வீரர் முரளிதரனின் தந்தை) எவ்வளவு பாராட்டினாலும் தகும். அதுபோன்று, இந்த விழா தொடர்பாகத் திறம்படச் செயற்பட்ட திரு. மதியழகன் முதல் இலங்கை வானொலியைச் சார்ந்த அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். நிகழ்ச்சியை, வானொலி அறிவிப்பாளர் இளையத் தம்பி தயானந்தா சிறப்பாக வழங்கிக் கொண்டிருந்தார். நிகழ்ச்சிகளைத் துணிச்சலுடன் விமர்சனபூர்வமாக அவர் தொகுத்து வழங்கியமை, என்னை மிகவும் கவர்ந்தது. நிகழ்ச்சிகள் பொதுவாகத் தரமாக இருந்தன. ஆனால், குறிப்பிட்ட ஒரு பாடசாலை மாணவர்கள் நாட்டார் பாடல்கள் பாடுவதாக அறிவித்து விட்டு, கர்நாடக இசைப் பாடல்களைப் பாடியமை, நாட்டார் பாடல்களைப் பற்றி அவர்கள் சரிவர விளங்கிக் கொள்ளவில்லையோ என்று எண்ணத் தோன்றியது. கண்டியில் சிறிய பாடசாலையாக விளங்கும் கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலை மாணவிகள் தரமான நடன நிகழ்ச்சியை அளித்தமை மகிழ்ச்சிக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த் திரையிசைப் பாடல்களில் இலக்கியம் ஒரு நோக்கு

- செல்வி. இரா. சர்மிளாதேவி -

*இத்தொடர் கட்டுரையை எழுதும் செல்வி இரா. சர்மிளாதேவி பேராதனைப்பல்கலைக்கழக தமிழ் விசேடத்துறை இறுதி வருட மாணவியாக கல்வி பயிலுகின்றார் தமது பட்டப்படிப்பிற்காக மலையக சிறு சஞ்சிகைகளை ஆய்வு செய்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது இலக்கியப் பயணம் மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.*

*- ஆசிரியர் -*

கற்றோரையும் கல்லாதோரையும் ஒருங்கே கவரும் ஒரு வெகுசன தொடர்பு சாதனமாக விளங்குவது திரைப்படம். திரைப்படத்தை விடவும் அதில் இடம்பெறும் பாடல்கள் மக்கள் விரும்பியோ விரும்பாமலோ அவர் தம் செவிகளில் ஒலித்த வண்ணம் இருக்கின்றன. திரைப்படத்தைப் பார்க்காதவர்கள் கூட இருக்கக்கூடும். ஆனால், திரையிசைப்பாடல்களைக் கேட்காதவர்கள் இருக்கக்கூடுமா என்பது சந்தேகமே. அந்தளவிற்கு பல் முளைக்கும் சிறார் முதல் பொல் பிடிக்கும் தாத்தா வரைக்கும் அனைவரின் செவிகளுக்கும் மனங்களுக்கும் இன்பமளிப்பன திரையிசைப்பாடல்கள். இவை மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கு பெறுவதற்கு வானொலி நிலையங்களே பெரிதும் காரணமாகின்றன. இதுதவிர தொலைக்காட்சி, கலையரங்குகள், பொது நிகழ்ச்சிகள் ஆகியனவும் சினிமாப் பாடல்கள் மக்கள் மத்தியில் புகழ்பெறக் காரணமாகின்றன.

திரையிசைப்பாடல்களைப் பொறுத்தவரையில் அவற்றில் நிறையும் இருக்கின்றன; குறையும் இருக்கின்றன. குறையை சுட்டிக் காட்டும் அதேவேளை, அவற்றில் உள்ள நிறைகளை கூறுதல் யாவருக்கும் பயனளிக்கும். அந்த வகையில் திரைப்படப்பாடல்கள் பல இலக்கிய நயம் கொண்டவையாகக் காணப்படுகின்றன. இலக்கியம் என்பது வாழ்க்கையில் வரும் அனுபவங்களை அழகுற புனைந்து கூறுவதாகும். சங்ககாலம் தொடக்கம் இன்று வரையிலும் பல்வேறு வகையான இலக்கியங்கள் தமிழிலே தோன்றியுள்ளன. அவ்விலக்கியங்களை அல்லது அவ்விலக்கியங்களில் காணப்படும் கருத்துக்களை அடியொற்றியதாகப் பல சினிமாப் பாடல்கள் வெளிவந்துள்ளன; வெளிவந்துகொண்டிருக்கின்றன.

இலக்கியங்களைச் சினிமாப்பாடல்களிலே கையாளுகின்ற பொழுது, இரண்டு விதமாக கையாளுவதை அவதானிக்க முடிகிறது.

1. இலக்கியங்களில் காணப்படும் பாடல்களை அவற்றின் கருத்து சிதையா வண்ணம் கற்பனைக்கு ஏற்ற வகையில் மாற்றியமைத்தல்.

2. இலக்கியங்களை அப்படியே திரையிசை வடிவில் தருதல்.

இவற்றினை அடிப்படையாகக் கொண்டு, சங்க இலக்கியம் முதல் இன்று வரையுள்ள இலக்கியங்கள் வரை எவ்வாறு சினிமாப்பாடல்களிலே கையாளப்பட்டுள்ளன என்பதை நோக்குவதே இக்கட்டுரையாகும்

சங்க இலக்கியங்களாக கொள்ளப்படுபவை 'எட்டுத்தொகை பத்துப்பாட்டு' இலக்கியங்களாகும். இவற்றைப் பொதுவாக அகத்திணை சார்பான இலக்கியங்கள், புறத்திணை சார்பான இலக்கியங்கள் என்று இரு பெரும் பிரிவாக பிரித்து நோக்குவர். அகத்திணை இலக்கியங்களுள் ஒன்று குறுந்தொகை. இதில் ஒரு சுவையான பாடல். தோழி ஒருத்தி தலைவனைப் பழித்துப் பேசுவதை கேட்கப் பொறுக்கமாட்டாது தலைவி, தலைவனுக்கும் தனக்கும் உள்ள உறவு எப்படிப்பட்டதென்றும் அது எந்தளவிற்கு சிறந்ததென்றும் விளக்க முற்படுகின்றாள்.

'நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர்அளவு இன்றே சாரல்
கருங்காற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனோடு நட்பே' (குறுந்-3)

இது தலைவியின் கணிப்பு. குறுந்தொகை ஆசிரியர் காதலருடைய நட்பைக் காட்ட நிலத்தையும் வானையும் கடலையும் உவமையாகக் காட்டுகின்றார்.

(தொடரும்.................)

## ஈழத்தில் பயில் நிலையிலுள்ள தமிழ் நாடக அரங்கியற் கலை

(சென்ற இதழ் தொடர்ச்சி........................)

(3) நாடகமாக முகிழ்த்த கூத்துக்கள்

காத்தான் கூத்து, தென்மோடிக் கூத்து, வடமோடிக் கூத்து, கிறிஸ்தவ பாரம்பரிய தென்மோடிக் கூத்து, வடபாங்கு, தென்பாங்குக் கூத்துக்கள், வாசாப்பு, இசை நாடகம், காமன் கூத்து அருச்சுனன் தபசு, பொன்னர், சங்கர் என்பன இவற்றுள் அடங்கும்.

இன்ன இன்ன பிரதேசங்களில் இன்ன இன்ன கூத்து வகைகள் வழக்கிலுள்ளன என்ற ஒரு பரந்துபட்ட அறிவு மேலும் இக்கூத்துக்கள் பற்றிய தெளிவை எமக்குத் தரும்.

கீழ்வரும் அட்டவணை இதனைத் தொகுத்துக் காட்டுகிறது.

| பிரதேசம் | கூத்துக்கள் |
|---|---|
| யாழ்ப்பாணம் | தென்மோடி வடமோடி, காத்தான் கூத்து, வசந்தன் கூத்து, இசை நாடகம். |
| முல்லைத்தீவு | காத்தான் கூத்து, கோவலன் கூத்து (தென்மோடி), கிறிஸ்தவப் பாரம்பரியத் தென்மோடி, குடமூதற் கூத்து, மகிடிக் கூத்து |
| வவுனியா | மகிடிக் கூத்து. |
| மன்னார் | கிறிஸ்தவப் பாரம்பரிய தென்மோடிக் கூத்து, வடபாங்குக் கூத்து, தென்பாங்குக் கூத்து, வாசாப்பு |
| சிலாபம் | வடமோடிக் கூத்து, கிறிஸ்தவப் பாரம்பரிய தென்மோடிக் கூத்து. |
| தம்பலகாமம் | வடமோடிக் கூத்து, தென்மோடிக் கூத்து, மகிடிக்கூத்து. |
| மட்டக்களப்பு | |
| கிழக்கு மாகாணப் பிரதேசம் | வடமோடிக் கூத்து, தென்மோடிக் கூத்து, வசந்தன் கூத்து, மகிடிக் கூத்து, பறைமேளக் கூத்து. |
| மலைநாடு | அருச்சுனன் தபசு, காமன் கூத்து, பொன்னர் சங்கர், வீரபத்திரன் ஆட்டம். |

பிரதேசக் கூத்துக்களின் தன்மைகள்

மேற்குறிப்பிட்ட பிரதேசங்களின் பயில் நிலையிலுள்ள கூத்துக்களின் தன்மைகளை அவைக்காற்றும் முறைகளை அறிந்து கொள்ளல் இவற்றினை பரந்த பின்னணியில் விளங்கிக் கொள்ளவும் பொதுமக்களுக்கு ஏற்பத் தயாரிக்கவும் உதவக் கூடும்.

பறைமேளக் கூத்து

மட்டக்களப்புப் பிரதேசத்தில் - அதிலும் குறிப்பாகக் களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்தில் இக்கூத்துப் பயில் நிலையிலுண்டு. பெரும் பறைகளை இடுப்பில் கட்டிக்கொண்டு கோயில் முன்றலில் மக்கள் முன்பு ஆடும் கூத்து இது. பறை ஒலியும், காலில் போடப்படும் சிலம்பு ஒலியும் சிறு குழல் ஒலியும் இந்த ஆட்டத்திற்குப் பின்னணி இசைகளாகும்.

வசந்தன் கூத்து

பன்னிருவர் அல்லது பதின்எண்மர் வட்டமாகச் சோடி சோடியாக நின்று கைகளில் வைத்திருக்கும் சிறு கோள்களைத் தட்டியும் அபிநயித்தும் ஆடுங் கூத்து இது. பெரும்பாலும் கோயில் முன்றலிலும், கோயில் சுவாமி, அம்மன் உலா வருகையிலும் அவ்வுலாவின் முன்னாலும் நடைபெறும் கூத்து இது. சுத்தமத்தளம் அல்லது டோல்கி ஒலியும் சல்லரி(தாளம்.) ஒலியும் கூத்தாடுவோர் காலிற் கட்டிய சதங்கை ஒலியும் கோயில்களினால் எழுப்பப்படும் ஒலியும் இக்கூத்தின் பின்னணி ஒலிகளாகும்.

(தொடரும்.................)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகலிட இலக்கியத்தில் மலையகம்

வி. தேவராஜ்
ஆசிரியர் – வீரகேசரி ஞாயிறு இதழ்

மலையக இலக்கியத்தின் ஆத்மார்த்தமான குரலை ஆங்கிலக் கவிதைகள் மூலம் உலக அரங்கிற்கு சி. வி. வேலுப்பிள்ளை எப்போதோ எடுத்துச் சென்றுவிட்டார். புலம் பெயர்ந்தோர் இதற்கு ஒரு படி மேல் போய் மலையக இலக்கிய ஆத்மாவை ஜேர்மன் மற்றும் பல மேற்கத்தைய மொழிகளில் உலவ விடுவதற்கான அடித்தளத்தை இட்டுள்ளமை மலையக மக்களுக்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதமாகும்.

புலம் பெயர்ந்தோர் இலக்கியத்தின் நிகழ்ச்சி நிரல்களில் மலையகம் தொடர்பான ஆக்கங்கள் கூடுதலான அளவில் இடம் பிடித்து வருகின்றன.

மலையகப் பரிசுக் கதைகளின் வெளியீட்டு விழாக்களும் அறிமுக விழாக்களும் இலங்கையை விட மிகக் கூடுதலாகவே மேலை நாடுகளில் நடைபெற்று வருகின்றன. பாரிஸ், இலண்டன், நெதர்லாந்து, கனடா எனப் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற விழாக்களே இதற்குச் சான்றாகும்.

'சன்ரைஸ்' (SUNRISE) வானொலியில் மலையக ஆக்கங்களுக்கு நிறையவே இடம் கொடுக்கின்றனர். அண்மையில் மல்லிகை சி. குமாரின் 'மாடும் வீடும்', பண்டாரவளை அன்புச் செல்வன் எம். சண்முகநாதனின் 'வாழவா தோழா' ஆகிய இரு கவிதை தொகுதிகள் பற்றிய குறிப்புக்கள் ஒலிபரப்பப்பட்டன. அத்துடன் லண்டன் 'சன்ரைஸ்' தமிழ் வானொலி 1994 இல் மு. நித்தியானந்தனை பேட்டி கண்டது. இந்த வானொலியின் இணைப்பதிகாரியும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவருமான கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன் இப்பேட்டி பற்றிக் குறிப்பிடுகையில் 'மலையக இலக்கியம் பற்றி அவர் தெரிவித்த தகவல்களும் கருத்துக்களும் எம் போன்றவர்களுக்கு ஒரு புதிய இலக்கிய உலகின் ஆற்றல்களை எடுத்து விளக்கின. வட-கிழக்கு, மாகாணங்களைச் சேர்ந்த நாங்கள் இது காலவரை அறிந்திராத-அறிய அக்கறைகாட்டாத மலையகத்தின் சகோதர சகோதரிகள் பற்றி எமது கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்திருந்தது என்று கூறியுள்ளமை குறிப்பிடக்கூடியது. இந்த வட்டுக்கோட்டைக் கலாநிதி ஒரு இரசாயனவியல் விஞ்ஞானியாவார்.

இதன் பிறகே மலையக ஆக்கங்களுக்கு இந்த வானொலி நிறைய இடம் கொடுத்தது. லயத்துச்சிறைகள் - நாவல்: (தி. ஞானசேகரன்) மலையகப் பரிசுக்கதைகள் - எஸ். நடேசனின் 'மலையகத் தமிழர் வரலாறு' போன்ற நூல்களைப் பற்றிய குறிப்புக்கள் லண்டன் சன்ரைஸ் வானொலி தமிழ்ச்சேவையில் ஒலிபரப்பியதுடன் மலையகம் தொடர்பான இலக்கியப் படைப்புக்கள், ஆக்கங்கள் போன்றவற்றை ஒலிபரப்புக்கென அனுப்பி வைக்கும்படியும் கேட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

புகலிட சஞ்சிகைகளிலும் மலையக ஆக்கங்கள் பல வெளிவந்துள்ளன. உதாரணத்துக்கென சிலவற்றை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாக அமையும்.

1. லண்டன் தமிழோசை (ஜனவரி 94) தெளிவத்தையின் 'மலையகத்தில் சிறுகதை' என்ற கட்டுரையைத் தொடர் கட்டுரையாக மறுபிரசுரம் செய்தது.
2. நெதர்லாந்து அ ஆ இ (தை 94) இதழில் மல்லிகை, சி குமாரின் 'அந்த ஜானகியைத் தேடி' என்னும் சிறுகதை பிரசுரமாகியது.
3. தாகம் (லண்டன் ஜனவரி 94) இதழில் மு. சிவலிங்கத்தின் 'இனி எங்கே' சிறுகதை பிரசுரமாகியது.

மலையகப் பரிசுக் கதைகள் தொடர்பாக நாழிகை இதழில் (மே 1995) மு. புஷ்பராஜனும், தாயகம் (10. 02. 1995) சஞ்சிகையில் யமுனா ராஜேந்திரனும் பதிவு செய்துள்ளனர். மாத்தளை சோமுவின் 'எல்லை தாண்டா அகதிகள்', 'அவர்களின் தேசம்' ஆகிய இரு நூல்களுக்கும் அவுஸ்திரேலியாவில் வெளியீட்டு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன.

புலம் பெயர்ந்தோர் மத்தியில் ஐரோப்பாவில் வேரோடிப் போயுள்ள மலையக இலக்கியப் பிரக்ஞையின் வெளிப்பாடாகவே மறைந்த எழுத்தாளர் என். எஸ். எம். ராமையாவின் குடும்பத்துக்கென இலக்கிய நிதி சேகரித்து கையளிக்கப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# தமிழன்னைக்கு மகுடம் சூடும் முஸ்லிம் எழுத்தாளர்கள்



பெயர்: அல்ஹாஜ் எம். பி. எம். அஸ்ஹர்
பிறப்பு: 06. 07. 1947
தந்தை பெயர்: முஹிதீன் பிச்சை
தாயின் பெயர்: நூர் ஸபாயா
கல்வி: டென்ஹாம் ஆங்கில பாடசாலை, நீல் வீதி மத்திய மகா வித்தியாலயம்
திருமணம்: 17. 01. 1976
மனைவியின் பெயர்: ஸஹீதா உம்மா
பிள்ளைகள்: ஐவர்

1963 ஆம் ஆண்டிலிருந்து பத்திரிகைகளுக்கும் வானொலிக்கும் சிறு சிறு ஆக்கங்களை எழுதி வந்த எம். பி. எம். அஸ்ஹர் 1965 ம் ஆண்டில் 'மஜ்லிஸே இஸ்லாமி' வெளியிட்ட புதுமைக் குரல் முஸ்லிம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து பத்திரிகையாளரானார். ஐந்து வருடங்களுக்கும் மேல் புதுமைக்குரல் வெளியானது. முதலில் மாத இதழாகவும் பின்னர் இருவார இதழாகவும் வெளியான புதுமைக் குரலில் முதலாவது இதழிலிருந்து கடைசி இதழ் வரை பணியாற்றினார்.

1969 ம் ஆண்டில் சுயாதீன பத்திரிகா சமாஜம் வெளியிட்ட தினபதி தினசரியில் இணைந்து முழுநேர உழைக்கும் பத்திரிகையாளராக மாறினார். பாராளுமன்ற செய்தியாளனாக பணிபுரியும் பொறுப்பும் 1969 ம் ஆண்டிலேயே கிடைத்தது.

1974 ம் ஆண்டில் தினபதி நிறுவனத்துக்கு அப்போதைய அரசு சீல் வைத்தது. உடனே வீரகேசரி தினசரியில் இணைந்து தொடர்ந்தும் பாராளுமன்ற செய்தியாளனாக பணிபுரிந்து வந்தார்.

தினபதியில் 'உள்ளும் புறமும்' என்ற தலைப்பில் பாராளுமன்ற 'லொபி' எழுதி வந்த அஸ்ஹர், வீரகேசரியில் 'பாராளுமன்ற பலகணி' என்ற தலைப்பில் 'லொபி' எழுதினார். இவரது 27 வருட கால பத்திரிகைப் பணியில் 23 வருட காலம் தொடர்ச்சியாக பாராளுமன்ற செய்தியாளனாக பணிபுரிந்தார். இந்தப் பெருமைக்குரிய ஒரேயொரு முஸ்லிம் பத்திரிகையாளர் இவர்தான் என்று கூறலாம்.

கடந்த 27 வருட காலத்தில் 'அல் இலம்' மாத இதழின் தமிழ்ப் பகுதி ஆசிரியராகவும், ஷிக்வா, உதயம் ஆகியவற்றின் ஆசிரியக் குழு உறுப்பினர்களில் ஒருவராகவும் அவ்வப்போது பணியாற்றியுள்ளார்.

அஜான், அஸ்கல்ப், அபூஅல்ஸர், ஸஹீதாமணாளன் போன்ற பல புனைப்பெயர்களில் தினசரிகளிலும் முஸ்லிம் இதழ்களிலும் எழுதி வந்துள்ளார்.

வானொலி, ரூபவாஹினி ஆகியவற்றுக்கும் பங்களிப்பு செய்துள்ளார்.

பத்திரிகையாளராக இந்தியா, ஈரான், துபாய், ஆகியவற்றுக்குச் சென்று செய்தி சேகரித்துள்ளார். ஈரான் - ஈராக் யுத்தத்தின் போதே ஈரானுக்குச் சென்று யுத்தப் பிரதேசங்களையும் பார்வையிட்டார். ஈரான் இஸ்லாமியக் குடியரசின் ஸ்தாபகர் மர்ஹூம் இமாம் கொமெய்னி, தற்போதைய ஈரான் தலைவர் அலி காமெய்னி, ஜனாதிபதி ரப்ஸன்ஜானி ஆகியோரை சந்திக்கும் வாய்ப்பும் அப்போது கிடைத்தது.

எலிஸபெத் மகாராணியார் உட்பட பல உலகத் தலைவர்களின் இலங்கை விஜயத்தின் போது செய்தி சேகரிப்புப் பொறுப்பை ஏற்றுச் செயல்பட்டார். இலங்கையில் இடம்பெற்ற பல சர்வதேச மகாநாடுகளிலும் பத்திரிகையாளனாக பங்குபற்றியுள்ளார்.

'மாண்புறு ரமழானில் மனதுக்கினிய சிந்தனைகள்' என்ற ரமழான் சிந்தனைகளைக் கொண்ட இவரது சிறு பிரசுரம் ஒன்று 1970 களில் வெளியானது. தற்போது 'நவமணி' வார இதழின் பிரதம ஆசிரியராகக் கடமைபுரிகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காமன் பண்டிகை

கலாநிதி. ந. வேல்முருகு
புவியியல்த்துறை பேராதனை பல்கலைக்கழகம்



தோட்டங்களில் ஆண்டுதோறும் மாசி மாதத்தில் வளர்பிறை மூன்றாம் நாள் தொடங்கி நிறைநிலா வரை காமன் பண்டிகையை மதச்சடங்காகப் பக்தியுடன் கொண்டாடுவர். காமனுக்கென கோவில் இல்லை. ஆனால் பெரும்பாலான தோட்டங்களில் அப்பண்டிகைக்கென ஒதுக்கப்பட்ட 'காமன் பொட்டல்' எனப்படும் வட்டக்களரி நிரந்தரமாக இருக்கும். விழாவுக்கு நாள் குறித்ததும் காமன் கூத்து நடத்தும் 'வாத்தியார்' தலைமையில் ஆற்றங்கரை அல்லது நீரோடைக்குச் சென்று 'கரகம் பாலிக்கப்படும்'. அருவிக் கரைக்குச் சென்று அனைவரும் நீராடிய பின்னர் விழா சிறப்பாக நடக்க இறைவனை வேண்டிக் குடத்தில் அல்லது செம்பில் தூய நீர் எடுத்துப் பூஜை செய்யும் நிகழ்ச்சியே 'கரகம் பாலித்தலாகும்'. பூஜை முடிந்ததும் காமன்கூத்தில் பங்குகொள்வோரைப் புனிதப்படுத்தியதற்கு அறிகுறியாக மஞ்சள் நீரில் தோய்த்தெடுத்த நூலைக் கையில் கட்டுவதை 'காப்புக்கட்டுதல்' என்பர். இந்நிகழ்ச்சிகள் முடிந்ததும் கலச நீரோடும் கரகத்தோடும் யாவரும் காமன் பொட்டலுக்கு வருவர். கலசத்தில் மாவிலை சூழ்ந்த தேங்காய் வைத்து மஞ்சள் கட்டப்பட்டிருக்கும். காமன்பொட்டல் அல்லது மன்மதஸ்தாபனம் செய்யுமிடம் தோட்டத்தில் ஓர் ஒதுங்கிய சுத்தமான பகுதியில் அமையும். அதற்கென ஒரு இடத்தை தேர்ந்தெடுத்துத் தண்ணீர் தெளித்து, சாணத்தால் மெழுகி மஞ்சள் நீர் தெளித்து, கூத்தின் அடித்தளமான ஆடலும் பாடலும் மேற்கொள்ளக்கூடியதாக ஓர் அடி உயரமும் ஆறடி நீளமுமான 'காமன் திண்ணை' அல்லது மேடை ஒன்று அமைக்கப்படும். சில தோட்டங்களில் நிரந்தரமாக ஒரே இடத்தில் இத்திண்ணையை அமைப்பதுமுண்டு. தோட்டத்தில் காமன்கூத்து ஆரம்பிக்கப்பட்டபோது இந்தியாவிலிருந்து வாத்தியார் கொண்டு வந்த மண்ணைப் புதைத்துள்ள இடமாகவும் அவ்விடம் கருதப்படுவதுண்டு.

'காமன்' சின்னமாக 'கம்பம் நடுதல், அல்லது 'காமன் நடல், அல்லது காமன் ஊன்றுதல் நடைபெறும். அன்பாய் வளர்த்ததொரு இன்பமுள்ள பேய்க்கரும்பும், ஓங்கார மாவிலையும், ஓசையுள்ள பொன்னரசும் ஆனை சேனை வைக்கோல் பிறிதானாகச் சுத்திய பின் அதனுள் விரட்டியொன்று அன்பாகத் தானூட்டி ஆழக் குழி தோண்டி அதிலே பால் ஊத்தி அழகான வெள்ளிப்பணம் சதிராகவே போட்டு சொந்தமாய் காமன் நட்டு', தப்பு முழக்கத்துடன் பாடிப் பூசை செய்து வழிபாடு நடாத்தப்படும். விழா ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு நிகழ்ச்சியின் போதும் மங்களத் தப்பு அடிக்கப்படும். காமன் ஊன்றியதும் கூத்து ஆரம்பிப்பதற்கு அறிகுறியாக 'லாவணி' பாடி மன்மதன், ரதிவேடம் தாங்குவோர் கம்பத்தை சுற்றி சிறிது நேரம் ஆடுவர். கம்பம் நட்டதிலிருந்து காமன் கூத்து முடியும் வரை அதில் பங்குகொள்வோர் அனைவரும் விரதமிருந்து மிகவும் தூய்மையாக வாழ்வார்கள்.

கம்பம் நட்ட மறுநாளிலிருந்து கூத்து ஆரம்பமாகும். மன்மதன் ரதிவேடம் தாங்கியோரின் ஆட்டங்கள் இந்நிகழ்ச்சிகளில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. மாலையில் கம்பத்தருகில் பூசை முடிந்த பின்னர் மன்மதனும் ரதியும் ஆடை அணிகளை அணிந்து திருமணத்திற்கு முன்னர் ஆடும் காதல் லீலை ஆட்டங்களை ஆடுவர். இவர்களது ஆடல் பாடல்களுக்கு 'தப்பு' பிரதான இசைக்கருவியாக அமைகிறது. லயங்களைச் சுற்றி ஒவ்வொரு வீடாக ஆடிவரும்போது, ஆட்டம் முடிந்ததும் பூசை செய்து உண்டியலில் 'காமன் காணிக்கை' இடுவார்கள். சிலர் தமது வீடு நாடி வந்த கூத்தர்களையும், கோஷ்டியினரையும் தங்கள் தகுதிக்கேற்ப சிற்றுண்டி கொடுத்து கௌரவிப்பதுண்டு.

காமன் கூத்தில் இறுதி நாளான காமதகன விழா மிக முக்கியமானது. 'காமதகன' விழா விடியும் வரை நடைபெறும் நிகழ்ச்சி ஆகும். பெரும்பாலும் பௌர்ணமி தினத்தன்று அல்லது வெள்ளி சனிக்கிழமை நாட்களாக நாள் குறிப்பது வழக்கம். விடியும் விழாவில் கலந்து மறுநாள் பகல் நிகழ்ச்சிகளிலும் கலந்து ஓய்வெடுப்பதற்கு வசதியாக இவ்வேற்பாடுகள் அமையும்.



காமதகன விழாவன்று காமன்பொட்டல் சாணத்தால் மெழுகப்பட்டு, கம்பத்தைச் சுற்றிப் பச்சைப்பந்தல் கட்டப்படும். நான்கு மூலைகளிலும் வாழை அல்லது கரும்பு நடப்படும். இப்பந்தலுக்கு அருகில் மணவறைப் பந்தலும் கம்பத்துக்கு எதிரில் சற்று தொலைவில் ஒருவர் ஏறி அமரத்தக்க ஓர் உயர்ந்த மேடையும் அதன் அருகில் மூவர் அல்லது நால்வர் அமரத்தக்க சிறிது தாழ்ந்த மேடையும் அமைக்கப்படும். காமன்பொட்டலைச் சுற்றித் தோரணங்கள் கட்டி அலங்கரிக்கப்படுவதுடன் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்படுவதுமுண்டு. காமதகனத்தன்று தோட்டம் திருவிழாக் கோலம் கொள்ளும். மக்கள் நீராடி விரதமிருந்து காமதகனக் கூத்தினைப் பார்ப்பார்கள் மாலையில் காமனுக்கு பூசைநடைபெறும். கூத்து நள்ளிரவு ஆரம்பமாகும் வரை சில தோட்டங்களில் கலைநிகழ்ச்சிகள் நடாத்தப்படுவதுண்டு. நள்ளிரவு கூத்து ஆரம்பமாவதற்கு அறிகுறியாகத் தப்பு அடிக்கப்படும். பெண்கள் மாவிளக்கு எடுத்து வருவதுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். தப்பு முழங்க ஊர்வலமாக வந்து காமனுக்கு பூசை நடைபெறும். இதன் பின்னர் திருமண நிகழ்ச்சிக்காக ரதிவேடம் பூண்டவர் மணவறையில் அமருவார். மன்மதனை ஆடை அணிகளால் அலங்கரித்து மங்களத்தப்புடன் அழைத்து வந்து திருமணப் பாடல்கள் பாடி அதற்கேற்ப ஆடி ரதிக்குத் தாலி கட்டப்படும்.

(தொடரும்.............)

*இந்த நல்ல மனங்களை எப்படி வாழ்த்துவது!*

ஒரு காலை நேரம் என்னைத் தேடி எனது இல்லத்திற்கு வந்தார் ஒருவர். நீண்ட நேரம் என்னோடு பேசினார். இலக்கியம், அரசியல், பத்திரிகைகள், சஞ்சிகைகளின் கடமை என்றெல்லாம் என்னோடு உரையாடினார். கண்டி இலக்கியச் செய்திமடல் தொடர்ந்து கிடைக்கின்றது. இச்செய்திமடல் மூலம் பல தகவல்களை பெற்றுக்கொள்ள ஒரு வாய்ப்பு கிடைக்கின்றது. இப்பத்திரிகை மேலும் வளர்ச்சிப்பெற எனது அன்பளிப்பு என்று ரூபா 1000/= தந்தார். வீடு தேடி வந்து பாராட்டு, அன்பளிப்பைத் தந்த இந்த நல்ல மனதிற்கு நன்றி. அந்த மனிதர் இவர்தான்.

திரு. பொ. முத்துராஜ்
49/1, டி. எஸ். சேனாநாயக்க வீதி – கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம் பெற்றுள்ள அல்ஹாஜ் ஏ. றசாக் அவர்களை நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## நல்ல மனம் வாழ்க



தொழில் அதிபர் அல்ஹாஜ் ஏ. றசாக் அவர்கள் நாடறிந்த ஒருவராக திகழ்கின்றார். பொபி பத்திகள் எப்படி வாசனை வீசுகின்றதோ அதைப்போல றசாக் என்ற மனிதனும் சமூகத்தில் மனம் வீசிக்கொண்டுள்ளார். விளையாட்டுத் துறையில் அதிக ஈடுபாடு கொண்ட இவர், அத்துறைக்கு பெரும் சேவையாற்றி வருகின்றார். கண்டியில் உதைப்பந்தாட்ட வளர்ச்சிக்கு ஒரு மைதானம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார். பல வறியக் குடும்பங்களுக்கு மறைமுகமாக இவர் செய்து வரும் உதவிகள் வெளிச்சத்திற்கு வராதவை. இவரின் உதவியால் பல வறியக் குடும்பங்கள் வாழ்ந்து கொண்டு உள்ளன. தமது தொழிற்சாலையின் மூலம் எத்தனையோ பேர்களுக்கு தொழில் வழங்கி அவர்களின் குடும்பத் துன்பங்களில் பங்கு கொண்டுள்ளார். கலை இலக்கியத் துறைகளில் ஈடுபட்டுள்ளோர்களது பணிகளுக்கு கைகொடுத்து வருகின்றார். 1978ம் ஆண்டு 8 பேருடன் ஆரம்பித்த பொபி ஸ்தாபனம் இன்று 158 ஊழியர்களையும், 1500க்கு மேற்பட்ட குத்தகைக்கு வேலை செய்யும் தொழிலாளர்களையும் கொண்டுள்ளது. இயந்திரங்களின் உபயோகமின்றி தொழில் வாய்ப்புக்களைக் கொடுக்கும் நோக்குடன் 125 தொழிலாளர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது மொனரா தீப்பெட்டி தொழிற்சாலை. ஆரம்ப காலத்தில் லக்கிலேண்ட் பிஸ்கட் ஸ்தாபனத்தில் 10 வருடங்கள் விற்பனை அதிகாரியாக கடமையாற்றிய இவர் வியாபாரத்தின் தலைவர் தனது தந்தை எனவும், தனது வாழ்க்கை வழிகாட்டியாக காலஞ்சென்ற லக்கிலேண்ட் பிஸ்கட் உரிமையாளர் சின்னசாமி ராமசாமி எனவும் பெருமையுடன் கூறிக் கொள்பவர். இவரைப் போன்றவர்கள் பணத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு வாழ்பவர்கள் அல்ல. இச்சமூகத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று சிந்திப்பவர்கள். இவரது சமூகப் பணிகளை மதித்து அகில இலங்கை சமாதான நீதவான் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அவரை கௌரவிக்கும் முகமாக இலக்கியச் செய்திமடல் இப்பகுதியை வெளியிடுகின்றது.

-ஆசிரியர்-

## ஒரு நல்ல மனதை வாழ்த்துகின்றோம்

ஒரு வர்த்தகராக மாத்திரம் இல்லாது இச்சமூகத்தினருக்கு நல்லதை செய்ய வேண்டும் என்ற ஒரு நல்ல மனம் கொண்டவர் அல்ஹாஜ் ஏ. றசாக் அவர்கள். இவரது சமூகப்பணிகளை நான் அறிவேன். இவருக்கு அகில இலங்கை சமாதான நீதவான் நியமனம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். வாழ்த்துகின்றேன்.

நாகலிங்கம் இரத்தினசபாபதி ஜே. பீ. (அ. இ.)
நாகலிங்கம்ஸ் ஜுவலர்ஸ் - கண்டி.

## நாடு போற்ற வாழ வாழ்த்துகிறேன்.

பொபி நிறுவனத்தின் அதிபர் அல்ஹாஜ் ஏ. றசாக் அவர்கள் ஒரு சிறந்த சமூகத்தொண்டர், மனிதர்களை நேசிப்பவர், கண்டியிலே விளையாட்டுத்துறையை மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர், செயல்படுத்தி வருபவர். அது மாத்திரமல்ல பல வறிய மக்கள் இவரது உதவியால் வாழ்ந்து வருகின்றார்கள் என்ற செய்தி மகிழ்ச்சித்தரக்கூடியதே. அன்னாருக்கு அகில இலங்கை சமாதான நீதவான் நியமனம் கிடைத்தமைக்கு வாழ்த்துகின்றேன்.

எஸ். முத்தையா ஜே. பீ. (அ. இ.)
லக்கிலேண்ட் பிஸ்கட் - குண்டசாலை

## எனது இனிய நண்பர் ஏ. றசாக் அவர்களை வாழ்த்துகின்றேன்

எனது இனிய நண்பரும், பொபி நிறுவனத்தின் அதிபரும் சமூகத்தொண்டருமான அல்ஹாஜ் ஏ. றசாக் அவர்களுக்கு அகில இலங்கை சமாதான நீதவான் நியமனம் கிடைத்தமை அவரது சமூகத் தொண்டுக்கு கிடைத்த கௌரவமாகும். என்னோடு மிக நெருக்கமானவரான இவரது சமூகப் பணிகளை மதிப்பவன் நான். கண்டி விளையாட்டுத் துறைக்கான பங்களிப்பினையும் அறிந்தவன். நான் இவர் மேலும் பல சமூகத் தொண்டுகளை ஆற்ற வாழ்த்துகிறேன்.

கனகரத்தினம் தவநாதன் ஜே. பீ.
கருணாநிதி அன்கோ - கண்டி.

## அல்ஹாஜ் ஏ. றசாக் அவர்களை வாழ்த்துகின்றேன்

கண்டி மாவட்டத்தில் சமய, சமூக, கலாசார, விளையாட்டுத் துறைகளில் முன்னின்று உழைத்து வரும் அல்ஹாஜ் ஏ. றசாக் அவர்கள் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். மேற்படி துறைகளில் அவர் தொடர்ந்தும் பணியாற்ற அவருக்கு கிடைத்த அங்கீகாரமாக இதனைக் கருதி அவரை வாழ்த்தி மகிழ்கின்றேன்.

செ. நடராஜா ஜே. பீ.
அதிபர்
அசோகா வித்தியாலயம் - கண்டி.

## அயராத உழைப்பாளர் அல்ஹாஜ் ஏ. றசாக் அவர்களை வாழ்த்துகின்றோம்

தொழிலதிபரும், சமூகத் தொண்டருமான அல்ஹாஜ் ஏ. றசாக் அவர்கள் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டிருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவர் கலை இலக்கிய சமூக விளையாட்டுத் துறைகளுக்கு உதவி செய்யும் ஒரு நல்ல மனிதராகத் திகழுகின்றார். அத்துடன் கண்டி உதைப்பந்தாட்ட விளையாட்டுத் துறைக்கு ஊக்கம் அளித்து வருவதோடு பல உதவிகளையும் நல்கி வருகின்றார். இதைப் போல கண்டியில் உதைப்பந்தாட்டப் போட்டிகளை நடாத்துவதற்கு அதற்கான ஒரு மைதானம் இல்லாமையால் இப்போட்டிகளை கண்டிக்கு வெளியே கம்பளை, அட்டன், நுவரெலியா போன்ற இடங்களில் விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகின்றார். இப்போட்டியாளர்க் ஆர்வம் கொள்ளும் வகையில் பொபி கிண்ணம் ஒன்றினை பரிசாக ஆண்டுதோறும் வழங்கி வருகிறார். உழைப்பால் உயர்ந்த இவர் மனித நேயமிக்க ஒருவராகவும் திகழுகின்றார். இவர் மறைமுகமாக சமூகத் தொண்டாற்றி வருபவர். இவரை நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

எம். எஸ். குவால்டீன் ஜே. பீ.
பத்திரிகையாளர்

## வாழ்க, வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

பிரபல தொழிலதிபரான இவர், விடாமுயற்சியாலும், அயரா உழைப்பினாலும் முன்னேறி இன்று பிரபல தொழிலதிபாரகவும், சமூக சேவையாளராகவும் திகழுகின்ற பொபி நிறுவன உரிமையாளர் அல்ஹாஜ் ஏ. றசாக் அவர்கள் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டிருப்பதையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைவதோடு அவரை வாழ்க, வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

க. ப. சிவம் ஜே. பீ. (அ. இ.)
பத்திரிகையாளர்

கண்டி பூரணவத்தை 18/13ச் சேர்ந்த இரா. அ. இராமன் அவர்களினால் கண்டி டி. எஸ். சேனாநாயக்க வீதி, இல: 302, லதா இம்பிரஸில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org